**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No. 799/2021 பெயர்- தங்கவேல் நாள்.03.12.2024

பி.வா.சா. ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா. 1: 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

தாவா சொத்து 02.03.2011ம் தேதி நான் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். கிரையம் வாங்கியபோது காலியிடமாக தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எந்த வருடத்தில் கட்டணம் கட்டினேன் என்றால் 2012ல் கட்டிடம் கட்டினேன். கடன் வாங்கிதான் கட்டிடம் கட்டினேன். வங்கியில் கடன் வாங்கி கட்டிடம் கட்டினேன். அப்போது ஜவுளி வியாபாரம் செய்து வந்தேன். 2000ம் வருடத்தில் இருந்த ஜவுளி வியாபாரம் செய்தேன். தனிப்பட்ட முறையில் செய்தேன். நானும் இந்த வழக்கின் வாதி சந்திரசேகரனும் கூட்டாக சேர்ந்து தொழில் செய்தோமா என்றால் செய்தோம். நாங்கள் செய்த தொழில் நட்டமாகி விட்டது என்றால் சரிதான். அதனால் நான் வங்கியில் வாங்கிய கடனை கட்ட இயலவில்லை என்றால் சரிதான். அதனால் நான் எனக்கு பத்தியப்பட்ட தாவா சொத்தை விற்று கடனை கட்ட வேண்டும் என்று முடிவு செய்தேனா என்றால் ஆமாம். சொத்தை விற்பனை செய்யபோவதாக புரோக்கரிடம் சொல்லி வைத்திருந்தேனா என்றால் சொல்லி வைத்திருந்தேன். பழனியப்பன் என்ற புரோக்கர் முலமாக 2ம் பிரதிவாதி என்னிடம் சொத்தை கிரையம் பெற வந்தார். அது சமயம் சொத்தில் மூல ஆவணங்களின் நகல்கள் மற்றும் வில்லங்க சான்றுகளை 2ம் பிரதிவாதி என் வசம் இருந்து பெற்றாரா என்றால் பெற்றார். மேற்படி தேதியில் மேற்படி சொத்தில் வில்லங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி தேதியில் மேற்படி சொத்தில் ஜப்தி எதுவும் இல்லை என்றால் சரிதான். 30 லட்சத்திற்கு கிரையம் பேசப்பட்டது. ரூ.11லட்சம் கிரைய முன்தொகையாக பெற்றேன். காசோலை மூலமாகத்தான் மேற்படி தொகையை கொடுத்தாரா என்றால் ஆமாம். மீதி கிரையத்தொகைக்கு 2ம் பிரதிவாதி வங்கியில் கடனுக்கு அப்ளை செய்து அது நேரடியாக எனது வங்கி கணக்கிற்கு வந்துவிட்டது என்றால் சரிதான். அந்த தொகையை கொண்டுதான் நான் ஏற்கனவே வாங்கியிருந்த வங்கி கடனை கட்டி

முடிப்பேனா என்றால் ஆமாம். அதன் பின்னிட்டுதான் கிரையம் எழுதப்பட்டது என்றாலும் மேற்படி கிரையப்பத்திரத்தில் மேற்படி சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய தேதியிலேயே நான் 2ம் பிரதிவாதியிடம் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டேனா என்றால் ஒப்படைத்து விட்டேன். மேற்படி தேதியிலிருந்து நாளது தேதி வரை 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறோர் என்றால் சரிதான். மேற்படி கிரைய தேதியில் தாவா சொத்தை பொறுத்து எந்த வழக்குகளும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நானும் இந்த வழக்கின் வாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு வாதியிடன் இருந்து கடன் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்தது போல் ஒரு வழக்கை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடமிருந்து துர்லாபம் அடையவேண்டி நானும் வாதியுடம் கூட்டு சேர்ந்து கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்கிறோம் என்றால் சரியல்ல. 2018ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை பொறுத்து 2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.